**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(3ம் வாதி ஆஜர். 1,2 வாதிகள் ஆஜர் இல்லை . 2ம் பிரதிவாதி ஆஜர்.1,3 முதல் 8 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.756/2018

பி.வா.சா.1: தர்மலிங்கம் த/பெ மாரப்பகவுண்டர்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

1. கொடிவழி வரைபடம் தாவாவில் இருப்பதை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. கருப்பாயி அம்மாள் திருமணம் செல்லாத என்றால் சரியல்ல. ராமாயியம்மாள் உயிருடன் இருக்கும் போது கருப்பணகவுண்டர் கருப்பாயி அம்மாளை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்றால் எனக்கு தெரியாது. கருப்பாயியம்மாளுக்கு பிறந்த 1ம் பிரதிவாதி வள்ளியம்மாள் என் தாயார் அருக்காணியம்மாள் மற்றும் என் தாயாரின் சகோதரர் சொங்கப்பன் ஆகியோர் சட்டப்படியான வாரிசுகள் இல்லை என்றால் சரியல்ல.

2. சொங்கப்பன் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

என் தாயாரின் தகப்பனார் கருபண்ண கவுண்டர் 11.11.1985யில் எவ்வித ஆவணங்களும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

3. கருப்பணகவுண்டர் ஆவணங்கள் எழுதி வைத்தார் ஆனால் தேதி தெரியவில்லை வருடம் 1983 இருக்கும்.

**வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**